Elections Ontario

# உமது வாக்குச் சீட்டில் அடையாளமிடல்

## ஓர் இரகசியக் கோப்புறையில் ஒரு வாக்குச் சீட்டில் அடையாளமிடல்

நீர் முற்கூட்டிய வாக்களிப்பின் போது அல்லது ஒரு தேர்தல் நாளில் தொழினுட்பத்துடனான ஒரு வாக்களிப்பில் வாக்களிப்பதாயின், உமக்கு ஓர் இரகசியக் கோப்புறையில் ஒரு வாக்குச் சீட்டுக் கிடைக்கும்.

1. ஒரு வாக்குச் சீட்டைக் கொண்ட இரகசியக் கோப்புறையை வாக்களிப்புத் திரையின் பின்னால் கொண்டு செல்க.
2. இரகசியக் கோப்புறையிலிருந்து வாக்குச் சீட்டை அகற்றி, நீர் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் பெயரை அடுத்துள்ள வெண் வட்டத்தில் ஒரு X அடையாளமிடுக.
3. அடையாளமிட்ட வாக்குச் சீட்டை மீண்டும் இரகசியக் கோப்புறையிலிட்டு, வாக்கு அட்டவணையாக்கிக்கு அருகிலுள்ளவரிடம் அதனைக் கொண்டு செல்க.
4. அவர் உமது வாக்குச் சீட்டை வாக்கு அட்டவணையாக்கியில் இடும் வரை காத்திருக்க.

நீர் உமது வாக்குச் சீட்டில் அடையாளமிடும் போது தவறிழைத்தால், வாக்குச் சீட்டை இரகசியக் கோப்புறையிலிட்டு அதனைத் தேர்தல் அலுவலரிடம் திருப்பிக் கொடுக்க. அவர் உமக்கு அடையாளமிட ஒரு மாற்றீட்டு வாக்குச் சீட்டை வழங்குவார்.

## ஒரு மடித்த வாக்குச் சீட்டில் அடையாளமிடல்

நீர் முற்கூட்டிய வாக்களிப்பின் போது அல்லது ஒரு தேர்தல் நாளில் தொழினுட்பமின்றி ஒரு வாக்களிப்பில் வாக்களிப்பதாயின், உமக்கு ஒரு மடித்த வாக்குச் சீட்டுக் கிடைக்கும்.

1. மடித்த வாக்குச் சீட்டை வாக்களிப்புத் திரைக்குப் பின்னாற் கொண்டு செல்க.
2. வேட்பாளர்களின் பெயர்களைக் கண்டு கொள்ள வாக்குச் சீட்டைத் திறக்க.
3. நீர் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் பெயரை அடுத்துள்ள வெண் வட்டத்தில் ஒரு X அடையாளமிடுக.
4. அடையாளமிட்ட வாக்குச் சீட்டை மீண்டும் மடித்து வாக்குச் சீட்டின் பின் புறத்தில் அவர்களின் முதலெழுத்துக்களைச் சரிபார்க்க தேர்தல் அலுவலரிடம் திருப்பிக் கொடுக்க.
5. வாக்குச் சீட்டுச் சரிபார்க்கப்பட்டதும், அது வாக்குப் பெட்டியினுட் போடப்பட உமக்கு மீண்டும் வழங்கப்படும்.

நீர் உமது வாக்குச் சீட்டில் அடையாளமிடும் போது தவறிழைத்தால், அதனை மீண்டும் மடித்து தேர்தல் அலுவலரிடம் திருப்பிக் கொடுக்க. அவர் உமக்கு அடையாளமிட ஒரு மாற்றீட்டு வாக்குச் சீட்டை வழங்குவார்.

## ஓர் எழுதிக் கொடுக்கும் வாக்குச் சீட்டில் அடையாளமிடல்

நீர் உமது திரும்பல் அலுவலகத்தில் வாக்களிப்பதாயின், உமக்கு ஓர் எழுதிக் கொடுக்கும் வாக்குச் சீட்டு கிடைக்கும்.

1. மடித்த வாக்குச் சீட்டை வாக்களிப்புத் திரைக்குப் பின்னாற் கொண்டு செல்க.
2. வழங்கப்பட்டுள்ள வெற்றிடத்தில் நீர் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் முதற் பெயரையும் இறுதிப் பெயரையும் எழுதுக.
3. அடையாளமிட்ட வாக்குச் சீட்டை மீண்டும் மடித்து வாக்குச் சீட்டின் பின் புறத்தில் அவர்களின் முதலெழுத்துக்களைச் சரிபார்க்க தேர்தல் அலுவலரிடம் திருப்பிக் கொடுக்க.
4. வாக்குச் சீட்டுச் சரிபார்க்கப்பட்டதும், அது வாக்குப் பெட்டியினுட் போடப்பட உமக்கு மீண்டும் வழங்கப்படும்.

நீர் உமது வாக்குச் சீட்டில் அடையாளமிடும் போது தவறிழைத்தால், அதனை மீண்டும் மடித்து தேர்தல் அலுவலரிடம் திருப்பிக் கொடுக்க. அவர் உமக்கு அடையாளமிட ஒரு மாற்றீட்டு வாக்குச் சீட்டை வழங்குவார்.